

சதுரங்க வெறியன்!
லயன் காமிக்ஸ்
ரூ. 2/-
ஸ்பைடர் சாகஸம்!


# ஸ்பைடர் தோன்றும் :

# சதுரங்க வெறியன்!

ஸ்பைடர்—என்ற பெயரைக் கேட்டாலே உலகமெல்லாம்
நடுங்கும்! குற்றவியலின் முடிசூடா மன்னன் - எத்தனுக்கு
எத்தன் - வலை மன்னன் - என்றெல்லாம் பெயர் பெற்ற
ஸ்பைடர், தன் வலைத் துப்பாக்கியைக் கொண்டு நிகழ்த்
திய சாகஸங்கள் கணக்கிலடங்கா. நிகரற்ற திறமையும்,
துணிச்சலும் கொண்ட ஸ்பைடருக்குப் புதியதொரு சவா
லாய் வந்தமைந்தவன் தான்—''சதுரங்க வெறியன்!''




# அத்தியாயம்—1 விசித்திரக் கொள்ளை!





உள்ளே, அவன் எதிரே பெரிய சதுரங்கப் பலகை ..
இதோ! எல்லாமே தயார்-இந்த சதுரங்க சக்கரவர்த்தி தன் ஆட் டத்தைத் துவக்கப் போகிறான்!


விஞ்ஞான நுணுக்கம் கொண்ட வித்தியாசமான சதுரங்கப் பலகை அது!
இந்தச் சிப்பாயை நான்காம் இடத்திற்கு நகற்றி முதல் பாதுகாப்புக் காவலைத் தகர்க்கிறேன்!


அங்கே சதுரங்கக்காயை நகர்த்திய அதேவேளையில் டர்பிரிட்ஜெஸ் கோட்டையிலோ பைசாசக் காரியங்களின் துவக்கம்...
நில் அப்படியே! உள்ளே இருந்து வேடிக்கை காட்டும் பைத்தியக்காரன் யார்..?


புரியாத புதிராய் இருக்கிறது! எப்படி இது ?



விஷ ஜந்துக்களின் கொடுக்குப்போன்ற அதன் கரத்திலிருந்து கிளம்பிய வெப்பக்கதிர் வீச்சு காவலனை செயலிழக்கச் செய்தது...
ஆ... அஹ்ஹ்!


ஹா.. ஹா! காரியம் நிறைவேறியதற்கான சமிக்ஞை வந்து விட்டது- நல்ல ஆரம்பம்!



சதுரங்க வெறியன் தனது அழிவு ஆட்டத்தின் இரண்டாவது நகர்த்தலுக்குத் தயாரானான்...
ஏய் . நகராதே! சதுரங்கக் காய்களுக்கு எப்படி உயிர் வந்தது?
எனது இந்த 'பிஷப்' வலு விழந்த பாதுகாப்பினை மீண்டும் தாக்கும்!
பிஷப்பின் செயல்பாடு மிகவும் கச்சிதமான முறையில் இருந்தது...
மட்!
அஹ்ஹஹ்!



அங்கே சதுரங்க வெறியன், திரும்பவும் வெற்றிச் சமிக்ஞையின் பிரகாசம் கண்டு கொக்கரித்தான்...
எனது பிஷப் மகா கில்லாடி! அடுத்து...


வஞ்சகமும் ஆபத்துக் குணமும், கொண்ட பெண்- அதாவது என் அருமை ராணி, முன்னேறி இறுதி வெற்றித் தாக்குதலைத் தொடுக்கப் போகிறாள்.


சதுரங்கத்தின் சக்திமிக்க பகடைக் காயான ராணி தரையில் கிடந்த காவலர்களைத் தாண்டி உள் நோக்கி விரைந்தாள்...



.. நேராய் கண்ணாடிக் கதவுகளை மோதி உடைத்து ஊடுருவினாள்!
டமால்!


பெண் இனத்தவள் ஆனதால்
ராணியின் பார்வை அறை
யின் மையத்திலிருந்த அந்த
ஆபரணப் பொருளைவிட்டு
நகர மறுத்தது—
டப்ரெல்லி வைரம்



டமால்!


ஹஹ்ஹஹா! முடிந்தது ஆட்டம்! வெற்றி-வெகுமதி எனக்கே!
என் அருமை செல்வங்களே, இனி நீங்கள் இந்த ராஜாவிடம் திரும்பலாம்!
அமைதியான அந்த இரவு வேளைக் காற்றில் அதிக சலனமின்றி தன பரிவாரங்களோடு கிளம்பினுள் ராணி ..


ஒரு கச்சிதமான சதுரங்க ஆட்டத்தின் மூலம் நம்ப இயலா அந்த அதிசயக் கொள்ளை அரங்கேற்றப்பட்டது!
சதுரங்கக் காய்களின் நீண்ட தூரத் திரும்புதல் பயணம் மிகச் சொற்ப நிமிடங்களில் அந்த ஹோவர்கிராப்ட் கலத்தில் வந்து முற்றுப் பெற்றது ..
வருக . வருக! என் அன்புக் கண்மணிகளே ..!
13


அந்த டப்செல்லி வைரத்தை!


ஆஹா! இந்த ராஜாவுக்குப் பொருத்தமான அன்பளிப்பு தான் இது!


வெற்றி பெற்ற கர்வத்தில் தன்னைத்தானே பாராட்டிக் கொண்டான் அந்த வெறியன்.
அஹ்ஹஹ்ஹா! என் அபாரமான மூளை இந்த வைரக்கொள்ளையை திட்டமிட்டு நிறைவேற்றி குற்றவியல் சரித்திரத்திலேயே ஒரு பெரும் சாதனை படைத்துள்ளது! இனி இந்த உலகம் என் காலடியில் .
உன் . ஒவ்வொரு... நடவடிக்கையிலும்... கவனம் தேவை! உன் விளையாட்டை.... தடைப்படுத்த.. ஒருவன்.. உண்டு! அவன்தான ஸ்பைடர்!
உணர்ச்சியற்ற இறுக்கமான குரலில் எச்சரிக்கை விடுத்தது அருகிலிருந்த சதுரங்கச் செயல்பாட்டு கம்ப்யூட்டர்!



சிலமணி நேரங்களுக்குப் பின், ஸ்பைடரின் ரகசியக் கோட்டையில்
சே! சோமாறிப் பசங்கள். இதெல்லாம் ஒரு தலைப்புச் செய்தியா?
ஸ்பைடரின் சபிப்பு எதிரிக்கு சோதனையின் ஆரம்பம் என்பது அவனது சகாக்களுக்கு நன்றாகவே தெரியும்!
ஹி-ஹி! செய்தித்தாளில் அப்படி என்ன செய்தி வந்திருக்கிறது பாஸ் அதிர்ந்து போய் நிற்கிறாரே?
ரொம்ப வேடிக்கையான பேர்வழி நம்பாஸ்!
ஏ...ஏ.. ராய்!


மற்றொரு சகாவான புரபஸர் பெல்ஹாமின் எச்சரிக்கை / கேட்டு ராய் ஆர்டனி சுதாரிக்கு முன் ...
மடையா என்னைப்பற்றி அபிப்ராயம் சொல்ல உனக்கேது தகுதி?
ய்ய்யீயீ!



தான் படித்த செய்திப் பத்திரிக்கையினை கோபத்துடன் அவர்கள் முன்னே விரித்துக் காண்பித்தான் —
நியூயார்க் டைம்
பயங்கரமான வைரக் கொள்ளை! சதுரங்க வெறியனின் பலே கைவரிசை!
சதுரங்க ராஜா என்ற ஒரு போக்கற்றவன் ஒரு சிறு திருட்டைச் செய்தானாம்! அதற்கு இந்தப் பத்திரிக் கைக்காரப் பசங்கள் குற்றவியல் சக்கரவர்த்தி என்று புகழாரம் சூட்டுகிறார்களாம் சே!



என்னை - இந்த ஸ்பைடரை . மறந்து விட்டார்களா? நேற்றுவரை என் பெயரைக் கேட்டாலே போதும் நடு நடுங்கிப் போனவர்கள்தானே இந்த நாட்டு ஜனங்கள்!
உங்கள் மகத்துவத்தை யாரும் மறக்கவில்லை, ஸ்பைடர் !
போதும், உன் சப்பைக்கட்டு! இந்த பேப்பரை எடுத்துக் கொண்டு என் பின்னாலே வா! நேரில் பார்வை யிடப் போகிறோம்.
ஊ...ப்!


ஆர்டினி! கடந்துபோன மகிழ்ச்சியான நாட்கள் இப்போது நினைவுக்கு வருகிறது! நமது மதிப்பிற்குரிய எஜமானர் இதுபோல் உன்னை எப்போதும் விளாசியதில்லை!
போதும், உன் கிண்டல்!
வாயை மூடிக்கொண்டு வாருங்கள் இருவரும்!
தங்கள் பத்திரிக்கைச் செய்தியின் பின் விளைவை அறியாத நியூயார்க் டைம்ஸ் என்ற நாளேட்டு அலுவலகத்தில் ..
ஜேக்கப், இன்றைய தலைப்புச் செய்தியாக நீ சேகரித்துக் கொடுத்திருக்கும் இந்த கொள்ளை விவகாரம் மிகப்பிரமாதம்! நாளைக்கும் இப்படி ஒரு செய்தி கிடைக்காது என்பது தான் இதில் பரிதாபத்திற்குரிய விஷயம்!
கவலைப்படாதீர்கள் - ஏதேனும் புதுச்செய்தி கிடைக்கலாம் !


சொன்னபடி கிடைத்து விட்டது!
சொட்டைத்தலையனும் நெட்டை மூஞ்சிக்காரனும் சேர்ந்து பத்திரிக்கை நடத்தினால் எப்படி இருக்கும் ..?
ஏ, யார் நீ...?
ய்யீயீ!
எதற்காக இங்கே வந்திருக்கிறாய்?
மூளையற்றவனே, நான்தான் ஸ்பைடர்! இந்த செய்தியை எழுதியவன் யாரென்று தெரிய வேண்டும்!


இந்த ஐயாதான் அதை எழுதியவர்! உனக்கு என் ஆட்டோகிராப் வேண்டுமானால்...
நிறுத்து! என்னிடம் வேடிக்கை காட்ட என்ன தைரியம் உனக்கு?


அச்சியந்திரப்பகுதி
வா, என்னேடு !
ஹே, போதும் உன் விளையாட்டு! என் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு...!


உன் அதிகப்பிரசங்கித்தனமான செய்திக்கு அழுத்தமான பாராட்டுக் கொடுக்க வேண்டும்!
ஆஆஆ!


-ஆறை! இன்றைய ''தலைப்''புச் செய்தியை உன் தலை மீது அச்சிட்டுப் பார்ப்போம்!
வே-வேண்டாம்...!
ப்ளீஸ்... நி-நிறுத்து... எந்திரத்தை! நீ... நீ எது சொன்னாலும் கேட்கிறேன்!


மறுகணம், துப்பாக்கியை பயன்படுத்தி எந்திரத்தின் இயக்கத்தை நிறுத்தினன் ஸ்பைடர்...
பட்ட!
ஸ்பைடரின் இரக்க குணம் உனக்கு அதிர்ஷ்டம் என எண்ணிக்கொள்!
இங்கே உட்கார், பையா! இப்போது நீ புதிய தலைப்புச் செய்தி ஒன்று எழுதப்போகிருய்!
நீ-நீதான் எஜமானன், ஸ்பைடர்!
24


பத்திரிக்கையின் கடைசி வெளியீட்டில் செய்தி சற்றுத் திருத்தம் செய்யப்பட்டு அச்சிடப்பட்டது
நியூயார்க் டைம்ஸ்
வரலாற்றில் மிகவும் கற்றுக்குட்டித்தனமான வைரத்திருட்டு ஒன்று நேற்றிரவு நடைபெற்றுள்ளது! இதனைச் செய்தவன் ஒரு மகாச் சோதாத் திருடன்... பெயர் சதுரங்க வெறியன்! புகழ்பெற்ற ஸ்பைடரை எண்ணிப் பார்க்கும்போது இவன் எவ்வளவு சாதாரணமானவன் என்பது விளங்குகிறது!


பாஸ், இதுதான் உண்மைச் செய்தி!
ஆம் இதுதான் உண்மைச் செய்தி!
ஆம்! பத்திரிக்கைத் தருமம் உண்மையைக் கூறுவதுதான்!



இந்தக் கழிசடை சதுரங்க வெறியனை ஒழிப்பது ஒன்றே உத்தமமான வழி!
வாருங்கள், தோழர்களே! பத்திரிக்கை உலகில் பங்கு வகிக்கும் மற்றைய நண்பர்களையும் சென்று பார்ப்போம்!
குற்றவியல் ராஜ்யத்தின் ரகசிய வாரப்பத்திரிக்கையான 'கிரிமினல் டைம்ஸ்' என்ற இதழை அன்றிரவு வாசித்துக் கொண்டிருந்தான் சதுரங்க வெறியன்.
ஹம்ப் பிங்கிள்ஸ் என்னும் பொற்கருவூலத்தில் பழமையான-முழுவதும் கட்டித்தங்கத்தால் வார்க்கப்பட்ட சதுரங்கக் காய்களைப் பார்வைக்கு வைக்கிறார்களாம்.



.. 'A—' பிரிவு குற்றவாளிகள் மட்டுமே அதனை திருட இயலும் எனப் பரிந்துரைக்கிறார் இந்த பத்திரிக்கை நிருபர்...


இதற்கு என்னைவிடத் தேர்ந்த குற்றவாளி யார் இருக்க முடியும்? இன்றிரவு அவை என் உடைமையாகிவிடும் அஹ்ஹஹ்ஹஹா!


ஆனால் அவனது கம்ப்யூட்டர் அது விஷயமாக ஏதோ கூற முற்பட்டது ..
எச்சரிக்கை இது ஒருவேளை... உனக்கு வைக்கப்பட்ட பொறியாயிருக்கலாம்! வீணாய்.. வம்பில் மாட்டிக் கொள்ள வேண்டாம்.
என்ன?
போதும், நிறுத்து! உன் உதவாக்கரை உபதேசம் தேவையில்லை எனக்கு!
என் அற்புத சதுரங்கச் செல்வங்களை — தடுத்து நிறுத்த — எவராலும் முடியாது!
ஸ்பைடரின் மரண வலையில் சிக்க மற்றுமொரு இரை தயாராகியது!


அன்றிரவு ஃபிங்கிள்ஸ் என்னும் பொற் கருவூலக் கட்டிடத்தின் மாடியில்—
அந்த சதுரங்க வெறியன் தங்கச் சதுரங்கப் பலகையையும் காய்களையும் கவர்ந்துசெல்ல வருவான் என உறுதியாக நம்புகிறீர்களாஸ்பைடர்?
பேராசை பிடித்தலையும் இந்தமாதிரி திருட்டு பசங்களின் அரை வேக்காட்டு மூளை எப்படி வேலை செய்யும் என்பது எனக்கு நன்றாகவே தெரியும்...!
ஆமாம்! ஏனென்றால் நீயும் அப்படி இருந்தவனதானே!


ஹே, ஆர்டினி! நீ என்ன நினைக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்! அத்துடன் நிறுத்திக்கொள் - இல்லையோ கழுத்தை முறிப்பேன்!
ஏ--என்ன ?
அங்கே பாருங்கள்..!


கீழே எந்திர வகைக் காய்கள் வரிசையாய் அணிவகுத்து நின்றிருந்தன ..
திருடனைப் பிடிக்க இந்தப் பெரிய திருடன்தான் பொருத்தமான ஆள்!
நாங்கள் அவைகளை உடைத்து நொறுக் குகிறோம், பாஸ்!





இரண்டாவது முறையும் சதுரங்க வெறியனின் கொள்ளைத் திட்டம் மூர்க்கத் தனமான தாக்குதலுடன் நிறைவேறிக் கொண்டிருந்தது. காவலர்களால் தடுக்க இயலவில்லை!




சதுரங்க வெறியனின் காய்களை காவலர்களாலோ அல்லது அந்தக் கடினமான சுவராலோ தடுத்து நிறுத்த இயலவில்லை
மடேர்!
தடுப்புக் கப்பிகளினுள் காட்சிப் பொருளாய் வைக்கப்பட்டிருந்த அந்தச் சதுரங்கக் காய்களை அநாயசமாய் தன் கொடுக்கு அமைப்பால் பற்றியது ராணிக்காய்...



அங்கே உயரே ஹோவர்க்ராப்ட் கலத்தில் சதுரங்க வெறியனின் முகம், மற்றுமொரு பரிசுப் பொருள் கிட்டிய மகிழ்ச்சியில் குரூரமாய்ப் புன்னகைத்தது
ஹா! வெற்றி...!
ஆனால் மறுவிநாடி...
ஹே! என்ன நடக்கிறது அங்கே? ஏதோ தவறு...



எலியனுக்குப் புலப்படாத ஏதோ மாறுதல்...
ஸ்விங்!



ஒளிர்விடும் வெம்மைப் பிரகாசத்துடன் ராணிக்காய் கட்டிடத்தின் மேலிருந்து கீழ் நோக்கி வந்தது !
விர்ர்ர்...
ஸ்விங்!



ஹி-ஹி! வெறியனின் பொம்மைக் காய்கள் என் வெம்மை சக்தியின் முன் நிலைகுலைந்து விட்டன !
இரும்பாய் இறுகிநின்ற சதுரங்க வெறியனின் முகம்.மறு விநாடி சடாரென மாறியது.
அவசரகால வாபஸ் இயக்கம் செயல்படட்டும்! திரும்பவும் கூறுகிறேன் . உடனடியாக வாபஸாகட்டும்!
இது.. இது எப்படி சாத்தியம்? என் திட்டத்தில் தவறுக்கு வழியில்லை!

ச.வெ.2


அந்த எந்திரக் காய்கள் தொலைதூர இயக்க உத்தரவிற்குப் பணிந்து கிளம்பின...


ஆனால் ஸ்பைடர் அதற்கு அனுமதியளிக்கவில்லை ..


என் இந்தச் சிலந்திவலையினுள்
ஊஞ்சலாடட்டும் அவைகள்!


தங்களது கூடுதல் எடையை வலை தாங்காது போகவே பெரும் ஓசையுடன் தரையில் வந்து மோதின!
இவைகளை இப்போது உருத் தெரியாமல் சிதைத்து விடவா பாஸ்?


பொறு, முந்திரிக்கொட்டை முட்டாளே ...


...என் திட்டத்தின் அடுத்த காட்சிக்கு இந்த ஆபத்தான எந்திரங்களில் ஒன்று தேவைப்படுகிறது!



இனி உன் விருப்பம்போல் அவற்றை நொறுக்கித் தள்ளலாம், ஆர்டினி!
ஓ .. நன்றி, பாஸ் . செத்த பாம்பை அடிப்பதில் நான் பலே கில்லாடியாக்கும்!
ஆர்டினியின் கையிலிருந்து வீசப்பட்ட அந்த அணுவிசை வெடிகுண்டு பெரும் நாசத்தை ஏற்படுத்தியது...



அதே சமயம், தொலைதூரத்தில் கொடியவன் சதுரங்க வெறியனிடத்தில் அது பெரும் கொதிப்பையும், கோபத்தையும் உண்டாக்கியது!
ஹும்ம்ம்!
என்...என் பிரியமான சதுரங்க நாயகர்கள்... அழிந்தனர் எல்லோருமே அழிந்தனர்!



இந்த . இந்த குதிரையைத் தவிர! இது மட்டும் எப்படி அந்த புரிந்துகொள்ள முடியாத பேரழிவிலிருந்து பிழைக்க முடிந்தது?
அவனது வினவுக்கான விடை வெகு சீக்கிரமே அறியத்தக்கதாயிருந்தது. ஸ்பைடரின் ஆய்வுக் கூடத்தில்..
உன் அளவுக்கு மீறிய நிதானத்தால் என் பொறுமையைச் சோதிக்காதே, பெல்ஹாம்! உள்ளே பொருத்தப்பட்டிருக்கும் இந்தக் கருவிகளிலிருந்து ஏவப்பட்ட இடத்தை உன்னால் கண்டுபிடிக்க முடிகிறதல்லவா?
ஆம், ஸ்பைடர்!


இந்த எந்திரப் பொருள் அரிசோனாப் பாலை வனத்தின் மேலே பறக்கும் கலம் ஒன்றிலிருந்து இயக்குவிக்கப்படுகிறது!
அப்படியானால் சட்டப்படி இதனை அதன் உடமைப்பட்டவனுக்குத் திருப்பி அனுப்புவதே நம் கடமை! ஆனால் அதற்கு முன்னதாக சில மாற்றங்கள் செய்தல் அவசியம்!
அடுத்த ஒருமணி நேரத்திற்குப்பின், அந்த குதிரை வடிவ எந்திர சாதனம அதன் எஜமானனது இருப்பிடம் நோக்கி அனுப்பப்பட்டது-துணையாக ஸ்பைடரின் ஹெலி-காரும் பின் தொடர்ந்தது!


அரிஸோனா பாலைவனத்திற்கான அந்த தொலைதூரப் பயணம் மிகச் சில நிமிடங்களிலேயே பூர்த்தியானது ..
குட் - பை, சதுரங்கக் குதிரையே! குட் பை, சதுரங்க வெறியனே! ஹா, ஹா,! ஹா ஹா!
என் அருமை குதிரை வந்துவிட்டது!


ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு உள்ளே பொருத்தப் பட்டிருந்த ஸ்பைடரின் குரல் அந்த எந்திர அமைப் பின் வாய்வழியே கிண்டலாய் வெளிப்பட்டது
மூளைகெட்ட முட்டாளே — வாழ்த்துக்கள்! இதோ உனக்கொரு செய்தி!
சதுரங்க ஆட்டத்தில் குதிரையின் வலிமை சிறப்பு வாய்ந்தது ஆனால் ஸ்பை- டரின் வலிமை அதனினும் மகத்துவமானது!
ஸ்பைடர்!


அனைத்தையும் இயக்கும் சதிகாரனின் கம்ப்யூட்டர் கருவி ஆபத்தை உணர்ந்து
அரி குதிரையை அழித்து விடு உடனே! இல்லையோ உன் விளையாட்டு தோல்வி கண்டுவிடும்!


எச்சரிக்கையினை ஏற்கனவே ஒருமுறை அசட்டை செய்த தால் நேர்ந்த தவறினை உணர்ந்து சடாரெனச் செயல் பட்டான் கொடியவன்
ஆ-ஆம்! ஆபத்திலிருக் கிறேன் நான்! இதனை இங்-கிருந்து உடனே அப்புறப் படுத்த வேண்டும்!



உஸ்ஸ் .: அப்பாடா! பிரச்னை நீங்கியது! ஆனால் கம்ப்யூட்டர் எச்சரிக்கை விடுத்ததன் அர்த்தம் புரியவில்லையே?


பீபீபீ!
மறுவிநாடி சந்தேகம் விடுபட்டது...
டமார்!


நல்ல நேரத்தில் எச்சரிக்கை செய்தாய், அருமைத் தோழா!
திரும்பவும் சொல்கிறேன்.. ஸ்பைடர் ஜாக்கிரதை!
நான்.. முன்பே.. சொன்னேன்! எச்சரிக்கை ஸ்பைடர்!
ஆம், அந்த ஸ்பைடர் அவன்தான் அனைத்திற்கும் காரணம்!
ஆள்தெரியாமல் என்னிடம் வாலாட்டத் துணிந்த சிலந்திவலைச் சிறுவனே! உன்னை நீ காத்துக்கொள்! இந்த சதுரங்கச் சக்கரவர்த்தி பழிதீர்க்கத் தயாராகி விட்டான்!
47


சதுரங்க வெறியனின் கவனத்திற்கு ஆளாகாது, நடந்த அந்த தொடர் சம்பவங்களை உன்னிப்பாய்க் கவனித்து வந்தான் ஸ்பைடர்
அதிர்ஷ்டக்காரப் பயல்... தப்பிவிட்டானே! அடுத்து இப்போது என்ன செய்வது பாஸ்?
ஒன்றும் செய்யப் போவதில்லை!


சுண்டைக்காய்ப் பயலுக்கு இப்பொழுது நம் ஆற்றலைப் பற்றித் தெரிந்திருக்கும்! இனி நம் பாதையில் குறுக்கிட மாட்டானென்று நினைக்கிறேன்!


மீண்டும் நம் விவகாரத்தில் இடைஞ்சல் செய்தால் அதற்காக அவனை வருந்த வைப்பேன் என்பது உறுதி!


மறுநாள்
கவனித்தாயா, புரபஸர் ..கொஞ்ச நாளாய் ஸ்பைடரின் கடுகடுப்புப் போய் சாந்தம் குடிவந்துவிட்டதே?
பாஸைப் பற்றிப் பேசி வீணாய் வம்பை விலைக்கு வாங்காதே. ஆர்டினி அவரது செவியின் கூர்மைக்கு தூரம் ஒரு பொருட்டே அல்ல!


ஸ்பைடரின் சகாக்கள் இருவரும் ஜன்னல் வழியே பறந்து வந்த அந்தப் பெட்டியைக் கவனிக்கவில்லை
த்தூ! பாஸாவது . மண்ணாவது .. யாரைப்பற்றியும் எனக்குக் கவலையில்லை!



மறுவிநாடி, தற்செயலாய்த் திரும்பிய ஆர்டினியின் பார்வையில் பட்டது அந்த ஆபரணப் பெட்டி.
ஹே, இதென்ன இங்கே புதிதாய் பெட்டி. ஒன்று முளைத்திருக்கிறது!
50


ஆ! சதுரங்கக் காய்கள்! உனக்குத் தெரிந்திருக்குமல்லவா? பொடிப் பசங்கள் விளையாடும் ஆபத்தற்ற இந்த சதுரங்க விளையாட்டில் ஸ்டைபருக்கும் நாட்டம் வந்து விட்டதோ!
அப்படியா? பின் ஏன் எனக்கு விளையாடத் தெரியவில்லை?
நான் தான் முதலிலேயே சொல்லிவிட்டேன் - இது அறிவாளிகளுக்குரிய விளையாட்டு என்று!
அது ஒன்றும் ஆச்சரியமில்லை! சதுரங்கம் அறிவு ஜீவிகளின் பொழுது போக்கு அம்சமாகும்!
கிண்டலா பண்ணுகிறாய்.. ஒழுங்காய் மரியாதையாய் எனக்கு ஆடக் கற்றுக்கொடு!
முடியாத ஒன்றை செய்யச் சொல்லி வற்புறுத்துகிறாய் வேறு வழியில்லை !


விளையாட்டுத் துவங்கி சில விநாடிகளே ஆனபொழுது ..
ஹே, புரபஸர் . என்னுடைய காய்களெல்லாம் உன்னதை விட பெரிதாய் இருக்கின்றன!
அப்படி ஒன்றும் .
இல்லே ..சந்தேகமேயில்லே, கவனித்துப்பார்! அவை மேலும் வளர்ச்சியடைகின்றன!
என்ன?


அடுத்த சில விநாடிகளில் அந்த சதுரங்கக் காய்கள் மேலும் பூதாகரமாய் உருவெடுத்துப் பயமூட்டின...
எ-எப்படி இவை? பு புரியவில்லையே!
பயங்கரத் தோற்றம்!



திடீரென...
ய்யீயீயீ! என்னைக் கொல்ல வருகின்றன!


காய்கள் ஆர்டினியை தம்மோடு சேர்த்து இழுத்துக் கொண்டு விண்ணில் 'விர்'ரெனப் பறக்கலாயின..
உதவி! புரபஸர், காப்பாற்று . என்னை!
எனக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை ஒரே குழப்பமாயிருக்கிறது!


ஐயோ! என்னை இழுத்துச் செல்கின்றன.. நான் கடத்தப் படுகிறேன்!


த்சு! த்சு! மிகவும் பரிதாப கரமான அபயக் குரல் இது!
புரபஸர். புரபஸர். ஸ்பைடரிடம் சொல்லி என்னை மீட்கச் சொல்! அவருக்கு நான் இது வரை எவ்வளவு விசுவாசமாய்ப் பணியாற்றி வந்திருக்கிறேன்
அதே சமயம்..
ஆஹா! என் திட்டம் சரியானபடி வேலை செய்கிறது ஸ்பைடர் என் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட்டான்!


மேலே கொண்டு வாருங்கள் அவனை, என் அழகுக் காய்களே. அந்த அற்பப்பதர் நமக்கு விளைவித்த சேதத்திற்கு சரியான பதில் கூறியாக வேண்டும்!


ஆனல்
ஏமாற்றப்பட்டு விட்டீர்கள் பகடைக் காய்களே! இவன்- இவன் ஸ்பைடர் அல்ல!
உண்மையைக் கண்டு பிடித்து விட்டாயே, அறிவுக் கொழுந்தே!



வாழ்க்கையில் தோல்வியே கண்டறியாதவன் நான்! இப்போது என்ன செய்வது?
வழக்கம்போல், ஏற்ற பதிலைத் தயக்கமின்றி ஒப்புவித்தது அந்தக் கம்ப்யூட்டர் ..
நீ . ஸ்பைடரின் கோட்டையில் பலவீனமான இணைப்பு ஒன்றினைக் கண்டு பிடித்திருக்கிறாய்...


அந்த . இணைப்புத்தான்... இந்த சூழ்ச்சிக்கார ஆர்டினி! அவனைப் பயன்படுத்தி... எதிரியை...முறியடி!
ஆம் ..அதுவே சரியான யோசனை! தந்திரமும்... சமயோசிதமும் இதில் மிக முக்கியம்!
சதுரங்க வெறியனின் இயற்கைக் குணமான கொடூரம் மறைந்து முகத்தில் கனிவுப் பார்வை குடியேறியது
கிண்டல் பண்ணுகிறாயா?
ராய் ஆர்டினி, எனது இடத்திற்குச் சிறப்புப் பார்வையாளனாக வந்திருக்கும் உன்னை மகிழ்வுடன் வரவேற்கிறேன்!


சுற்றிலும் பார்! சரித்திரத்தின் மகோன்னத்தம் மிக்க குற்றவியல் நிறுவனத்தின் தலைமையகம் இதுவே!
விளக்கம் தேவையேயில்லை புரிகிறது....!
எனது இந்த அற்புத சதுரங்க நாயகர்களின் துணையோடு என் ஒப்பற்ற மூளையையும் பயன்படுத்தி உலகின் அரிய பொக்கிஷங்கள் சிலவற்றை ஏற்கனவே அபேஸ் செய்து விட்டேன்!
போதும், போதும்! வளவள வென்று கதையளக்காமல் விஷயத்திற்கு வா!
59


விஷயம் இதுதான். ஆர்டினி! நீயும் என் நிறுவனத்தோடு இணைந்து விடு!
நானா?
ஸ்பைடர் குற்றத்தொழிலில் ஈடுபட்டிருந்த காலத்தில், அவனது வெற்றிக்கு உன் கில்லாடித்தனமும் பெரிதும் பயன்பட்டு வந்தது என்பதை நானறிவேன்!
எ.. என் கில்லாடித் தனம்? ஆ.. ஆமாம்! என் திறமையை நான் அதிகம் வெளிக் காட்டிக் கொள்வதில்லை!
நாம் இருவரும் கூட்டணி சேரும்போது, உலகின் எந்த ஒரு சக்தியாலும் நம்மை தடுக்க முடியாது!


...ஸ்பைடரை மட்டும் தீர்த்துக் கட்டி விட்டால்!
என்னை ரொம்பவும் மட்டமாய் எடை போட்டு விட்டாய்...ஸ்பைடர் என் நெடுநாள் தோஸ்த்! அப்படி அவனைத் தீர்த்துக் கட்டத்தான் வேண்டுமென்றால் அவனது தகுதிக்குச் சமமான அரிய பொருள் ஒன்றினை நீ எனக்குத் தருவதுவே முறை ..


...அது சென்ற இரவு நீ அடித்து வந்த டப்ரெல்லி வைரமாய் இருந்தால் கூட போதும்!
என்ன ?


அந்த அழகிய வைரத்தை உன்போன்ற கழிசடை பிக்பாக்கெட் காரனுக்குக் கொடுப்பேனென்று நினைத்தாயா?
சரிதான் நிறுத்து! ஸ்பைடரின் உயிருக்கு நான் கேட்கும் விலை சொற்பமே!




பலவாருன விசைகள் பொருத்தப்பட்டிருந்த அந்தக் கண்ட்ரோல் பலகையின் லீவர் ஒன்றினைக் கீழ்நோக்கி இழுத்தான் சதுரங்க வெறியன். கட்டங்கள் வரையப்பட்டிருந்த ஹோவர்கிராப்டின் பக்கச் சுவர்கள் பயங்கரமாய் அதிர ஆரம்பித்தன.




விநோதமான தோற்றங்கள் ஊன்றுக்குத் தெரிந்ததுடன் காதைச் செவிடாக்கும் கர்ணகடூரமான ஒலி ஒன்று காற்று மண்டலம் முழுக்கப் பரவியது
ஆ - ஆமாம்!
துஷ்டனே, உன் எண்ண ஓட்டத்தை ஒரு நிலைப்படுத்து! உறக்கம் உன்னைத் தழுவுவதாக உணருகிறாயா நீ?



நீ இப்போது மயக்க நிலைக் குச் சென்று விட்டாய், ஆர்டினி.. மயக்கம் . ஆழ் மயக்கம்!
சதுரங்க வெறியனின் மென்மையான வசீகரக் குரல் எதிர்பார்த்த பலனைத் தந்தது
கேள் நான் சொல்லப் போவதை மிக உன்னிப் பாய்க் கேள் ..!
நீ – நீதான் என் பாஸ்!
ஸ்பைடர் என்னை முட்டாளாக்கப் பார்க்கிறான் . அவன் தண்டிக்கப் பட வேண்டும்! திருப்பிச்சொல் ..
ஸ்பைடர் தண்டிக் கப்பட வேண்டும்!


நீ திரும்பவும் ஸ்பைடர் இடத்திற்குப் போகிறாய். அவன் மறுபடி என் பெயரை உச்சரிக்கும்போது நீ அவனைக் கொல்கிறாய்! நீ ஸ்பைடரைக் கொல்கிறாய்! புரிந்ததா?
காதுக்குள் உருவேற்றப்பட்ட வார்த்தைகளை முடுக்கிவிடப்பட்ட பொம்மைபோல் ஒப்புவித்தான்...
ஸ்பைடரை நான் கொல்ல வேண்டும்! ஸ்பைடரை நான் கொல்ல வேண்டும்!

## அத்தியாயம் — 3 சரண்!

அங்கே ஸ்பைடரோ கடத்தப்பட்ட ஆர்டினியை எண்ணி கொஞ்சமும் கலங்கியதாய்த் தெரியவில்லை






ஆனால் அவன் உண்மையில் குறிவைத்திருப்பது உனக்குத்தானென்ன நினைக்கிறேன், ஸ்பைடர்!
என்ன...?
அந்த ராஸ்கலுக்கு கண்ணியம் என்பதோ பெருந்தன்மையை மதித்து நடக்கும் மனிதப் பண்போ கிடையாது போலும்!
திடீரென...
ஆர்டினி! தப்பிவந்து விட்டாயா.. எப்படி?
ப்பூ! அது ரொம்பச் சுலபமாய் முடிந்து விட்டது, பாஸ்!



அற்றைற்றைா! பெரிதாய் பீற்றினானே அந்த சதுரங்க வெறியன்! மறைகழன்ற கோமாளிப் பயலான உன்னைத் தப்பிக்கவிட்ட பேமானிதானே அவன்!


ஆர்டினியின் சிறு மூளையில் லேசாய் பொறி ஒன்று தட்டியது
சதுரங்க வெறியனின் பெயரைத் தூற்றுகிறான்! இவனை நான் கொல்ல வேண்டும்!


ஸ்பைடரை நான் கொன்றாக வேண்டும்!
ஹே, என்ன செய்கிறாய்?
நிலைமையை உணர்ந்து சடாரென உயரே பாய்ந்தான் ஸ்பைடர்...
நயவஞ்சகா!



உன்னை நான் கொல்லாமல் விடப் போவதில்லை, ஸ்பைடர்!
முயற்சித்துப் பாரடா, குரங்கு மூஞ்சிப் பயலே!
ஹா! ஹா! உன் கற்றுக் குட்டித்தனம் சிரிப்பைத்தான் ஏற்படுத்துகிறது!


மேலும் அவனிடம் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்க விரும்பவில்லை ஸ்பைடர் ...
வீணாய் ஏன்தான் என்னிடம் உதை வாங்குகிறாயோ!
உய்ய்ங்ங்!


ஆர்டினிக்கு வெகு நேரத்திற்குப் பின் பழைய நினைவுகள் மீண்டும் ஞாபகத்திற்கு வர ஆரம்பித்தன ..
அஹ்ஹ! நா-நான்... எங்கே இருக்கிறேன்?


ஸ்பைடரின் வலையில்
சிக்கியிருக்கிருய்,
சிறு பூச்சியே!
உன் உயிரைக் குடிக்கும் முன்னல் - அதாவது உன் அவல
வாழ்க்கைக்கு ஒரு முற்றுப் புள்ளி
வைக்கும் முன்னல்-என்னைக்
கொல்ல எந்தத் தைரியத்தில்
துணிந்தாய் என்பதை அறிய
விரும்புகிறேன்!
நா.. நான்.. உங்களைக்
கொல்ல முயன்றேனு?


ஆத்திரத்தைக்கிளப்பாதே, ஆர்டினி. உன் மரணம் வேதனையற்றதாய் இருப்பதென்பது என் 'மூட்' இருக்கும் விதத்தைப் பொறுத்தது! தற்போது அது சாதகமானதாய் இல்லை உனக்கு. எனவே வேஷம் போடாமல் உண்மையைக் கக்கு!
பாஸ் உங்களுக்கு உண்மையாய் உழைத்த இந்த ஆர்டினி பொய் சொல்வானா? நம்புங்கள் எனக்கு நடந்தது எதுவுமே ஞாபகமில்லை!


உன்னிடம் வாய்ப் பேச்சு பயன்படாது.
ஸ்பைடர், பொறுமை!


ஒருவேளை ஆர்டினி மறதி வகை நோய் பீடிக்கப்பட்டு நடந்தவற்றை ஞாபகத்திற்குக் கொண்டுவர முடியவில்லையோ என்னவோ!
இருக்காது! ஆனாலும் அதை உறுதிப்படுத்திக் கொள்வோம்! ஞாபக மறதியைப் போக்க சரியான வைத்தியம்!
...ஒரு தடால் அடி கொடுப்பது தான்!
ஊப்!
சிலந்திவலை மாஸ்டரின் வழி வகைகள் முரட்டுத்தனமானவைதான், ஆனால் பலன் சர்வ நிச்சயம்...
ஓ! நடந்தவை எல்லாமே திரும்பவும் ஞாபகத்திற்கு வருகின்றன...
மீண்டும் மறந்து போவதற்கு முன் ஒப்பித்துத் தொலையடா முட்டாளே!


தன் கடத்தலைத் தொடர்ந்து தனக் கேற்பட்ட அனுபவங்களை ஒன்றுவிடா மல் மெதுவாய் சொல்லி முடித்தான் ராய் ஆர்டினி... கடைசியாக...
உங்கள் முகத்திற்கு நேரா கவே சொல்கிறேன், பாஸ் உங்களைக் கொல்ல வேண் டுமென்ற எண்ணத்தைத் என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை!
அந்த அயோக்கிய ராஸ்கலின் வேலையா இதெல்லாம்!
ஆனால் இங்கே நடக்கும் உரையாடல் அனைத்தையும் ஸ்பைடர் அறியாமலேயே வார்த்தைக்கு வார்த்தை அப் படியே தன் இருப்பிடத்திலிருந்தவாறே கேட்டுக் கொண் டிருந்தான் எதிரி...அதற்கு உதவியதோ ஆர்டினியின் கைக்கடிகாரத்தில் அவன் பொருத்திவிட்டிருந்த மினி டிரான்ஸ்மிட்டர் கருவியே!
அந்தத் திருட்டு நாயின் கொட்டத்தை அடக் காமல் விட்டது தப்பாகப் போய்விட்டது!


ஸ்பைடரின் பேச்சைக் கேட்டு ஏமாற்றமும், எரிச்சலும் கொண்டான் சதுரங்க வெறியன்!
ச்சே! திரும்பவும் எனக்குத் தோல்விதான் ஏற்படும் போலும்...
எந்திரமே, தவறு முழுக்க உன்னைச் சேர்ந்ததுதான்! உன் யோசனை வெட்டித்தன மானது என்பது மீண்டும் நிரூபணமாகி விட்டது!
முழுக்க மோசம் போகிவிடவில்லை!
நீ ..வெற்றிபெற இன்னும் சந்தர்ப்பம் இருக்கிறது! முதலில்.. நீ.. ஸ்பைடரின் எல்லைக்குள் புக வேண்டும்!


தன் செஸ்-ஓ-மாடிக் எந்திரம் கூறிய யோசனையின் அர்த்தம் காண குறுக்கும் நெடுக்குமாய் நடந்தான் சதுரங்க வெறியன்! திடீரென...
அற்புதமான ஐடியா! இலகுவானது .. கச்சிதமானது .. காரியத்தை முடிக்கக் கூடியது! ஸ்பைடரின் அத்தி-யாயம் குளோஸ்!
தன் விதிக்கு வினையாய் ஸ்பைடர் ஆயத்தமாகிக் கொண்டிருப்பதை அறியவில்லை அவன்!
சிலந்தி வலையில் சிக்கிய சிறு பூச்சியினைப் போல் விரைவிலேயே துடிக்கப் போகிறான் இந்த சதுரங்கக் கோமாளி!


பெல்ஹாம், என் ஹெலி-கார் தயாரா?
தயார்தான், ஸ்பைடர் ஆனால் அதனைப் பயன்படுத்த அவசியமில்லை என நினைக்கிறேன்!
.. உனக்குச் சிரமம் தராது அவனே வந்து விட்டான்!
சதுரங்க வெறியன்!


சதுரங்க வெறியனின் பறக்கும் பலகை பூப்போலத் தரையிறங்கியது
உன் தைரியமனைத்தையும் ஒன்று திரட்டி என்னை நேருக்கு நேர் சந்திக்க வந்து விட்டாய்! திறமைக்கும் திறமை நேரடி மோதல்!
உங்கள் எண்ணம் தவறு, ஸ்பைடர்...
சதுரங்க வெறியனின் கண்களில் பயமும், பணிவும் தென்பட்டன...
உங்கள் தற்புகழ்ச்சி உங்கள் திறமையைப் போலவே உயரியது! பரிதாபத்திற்குரிய சிறு மூளைக்காரனை என்னோடு உங்களை ஒப்பிடுவது சற்றும் பொருந்தாத செயல்!
ஹே? இதென்ன சூழ்ச்சி நாடகம்?


தொடர்ந்து அடக்கத்துடன் பேசினான்...
சூழ்ச்சி இல்லை, ஸ்பைடர் முன் யோசனையுடன் திட்டமிடும் என் திறமைக் காலம் முடிந்து விட்டது!
உண்மையில் இங்கே வருவதைத் தவிர்த்து எனக்கு வேறு வழியில்லை! சட்டத்திற்கு எதிராய் என் குற்றத் தொழிலை நடத்துவது மிகவும் அறியாத்தனமாகும்!
ஹ்ம்ம்! உன் மூளை இப்போது தான் வேலை செய்கிறதோ?
உண்மைதான்! குற்றவியல் சாம்ராஜ்யத்தில் திறமைக்குரிய தலைமை ஸ்தானத்தினை ஆக்ரமிக்க பராக்கிரமசாலியான தாங்கள் இருக்கும் பொழுது, இந்த அற்பனெல்லாம் குற்றத் தொழிலுக்கு முழுக்குப் போட்டு விடுவதுதான் மரியாதை!
ஆஹா! ஆஹா!!



உங்கள் பாராட்டு சினிமா வசனம்போல் தோன்றுகிறது, மகுடத்தலையரே...
கிண்டலா செய்கிறாய் புழுவே? இந்த ஸ்பைடரைப்பற்றி அவன் சொன்னதெல்லாம் உண்மை-யில்லை என்று நீ நினைக்கிறாயா?
அஹ்ஹ்! இல்லை! ஆளைக் கொஞ்சம் துருவிப் பார்ப்போமென்று நினைத்தேன், பாஸ்!


சதுரங்க வெறியனின் சரணாகதி வாக்கு மூலத்தை நம்பினான் ஸ்பைடர்
ஆனால் இதுவரை நீ செய்திருக்கும் பெரும் பாதகமான குற்றங்களுக்கு பதில் கூறித் தானாக வேண்டும்!
என்னை தண்டனையிலிருந்து காப்பாற்றிக் கொள்ள நான் இங்கு வரவில்லை, மிஸ்டர் ஸ்பைடர்! இங்கிருந்து கிளம்பியதும் நேராக நான் போலிஸிடம்தான் போகப் போகிறேன்!
உங்களுக்கு ஒரு வெகுமதி தர விரும்புகிறேன்! என்னை நல்வழிக்குத் திருப்பிய உங்களுக்கு நான் தரும் சிறு அன்புக் காணிக்கை...
நன்றி மிக்க நன்றி!
83


தலைதாழ்த்தி வணங்கிக் கிளம்பினான். சதுரங்க வெறியன்...
சென்று வருகிறேன், பார் போற்றும் பராக்கிரமசாலி ஸ்பைடர் அவர்களே!
சிலந்திவலை மாஸ்டர் தன் புதிய 'நண்பனின்' முகபாவத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கவனிக்கவில்லை
முட்டாள்! நான் திருந்தி விட்டேனெனக் கூறியதை உண்மை என்று நம்பி விட்டான்! இந்தச் சனிப் பயல் ஸ்பைடரின் தொல்லை நிரந்தரமாய்த் தீர்ந்துவிடும்!


அங்கே ஸ்பைடரோ அளவற்ற மகிழ்ச்சியில் தத்தளித்துக் கொண்டு பெருமைக்குரலில் விளக்கிக் கொண்டிருந் தான்...
மாமேதை ஸ்பைடரை சரியாகப் புரிந்து கொண்ட... ஒரே பயல் இந்த சதுரங்க வெறியன் தான்!
சொல்லப் போனால் பயலை நம் இடத்திலேயே ஒரு வேலை போட்டுக் கொடுத்து தங்க வைத்திருக்கலாம்!


திடீரென...
ஆஹா! நண்பர்களே, இதோ போலீஸார் சதுரங்க வெறியனை சரணடையச் செய்தமைக்காக நன்றி சொல்ல வந்திருப்பார்கள் ..
அது உன்னுடைய நினைப்பு ..


அதே சமயம் பலமைல் தொலைவில் சிறு சுவிட்ச் ஒன்று அழுத்தப்பட இங்கே ஸ்பைடரின் இடத்தில்...
டப்ரெல்லி வைரம்!
கராக்!


மர்ம மனிதன் ஒருவன் போனில் உன்னிடம் களவு வைரம் இருக்கும் உண்மையைக் கூறினான்!
ஏ...எப்படி இது..
காவலர்களே, பிடியுங்கள் அவனை!
என்னை இந்த ஸ்பைடரை மாட்டிவைக்க நடந்த சதி இது!
அதிர்ச்சியிலிருந்து விடுபட்டதும் நிதானமிழந்து நடக்கத் துவங்கினான் ஸ்பைடர்!
ஆனால் நீங்கள் என்னைக் கொண்டுபோக முடியாது! நிச்சயமாய் சிலந்திவலைச் சவப்பெட்டி உங்களுக்கு உண்டு!


மன்னிக்க வேண்டும் ஸ்பைடர் உன் கிறுக்குத் தனத்தால் உயிரிழக்க நான் தயாரில்லை! குண்டு துளைக்க முடியா கவச உடுப்பு எங்களிடம் கிடையாது!
ஏய், நீ ஒரு பச்சோந்தி என்பது எனக்கு நன்றா-கவே தெரியும்!
பிரமாதம், ஆர்டினி!
வழக்குத் தொடரப்பட்ட மறுநாள் ஸ்பைடர் உயர்நீதி மன்றத்தின் முன் கொண்டுவந்து நிறுத்தப் பட்டான்..
ஸ்பைடர் சமூகத்திற்கு எதிராய் நீ இழைத்த குற்றங்கள் ஏராளம்!




விசாரணை வேகமாகவும், சீராகவும் நடைபெற்றது. தீர்ப்பும் சந்தேகத்திற்கிடமற்ற தெளிவான வாசகமாய் ஒலித்தது ..
சே! நேர்மைக்குக் காலமில்லை!
சாட்டப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது! எனவே 900 ஆண்டு கால சிறைத்தண்டனை விதிக்கிறேன் உனக்கு!
ஆயுதங்கள் பறிக்கப்பட்டு நொந்துபோய் தனியறையில் அமர்ந்திருந்த வேளையில் தான் ஸ்பைடரின் உண்மையான உணர்வுகள் தம்மை அடையாளம் காட்டத் துவங்கின ..
என்ன கொடுமை இது... செய்யாத ஒரு குற்றத்திற்கு தண்டனையா?


சதுரங்க வெறியன் வெற்றி பெற்று விட்டான்! இந்த நேரத்தில் அவன் என்னை எண்ணி ஏளனமாய்ச் சிரித்துக் கொண்டிருப்பான்!
.. ஆனால் அவன் தன் வெற்றிக் கொக்கரிப்புக்குத் தரப் போகும் விலை அதிகமாயிருக்கும்! என் அதிர்ஷ்டம் இந்த அரை வேக்காடு சட்டக் காவலர்கள் சோதனையின் போது என் பூட்ஸின் ரகசிய அமைப்பைக் கவனிக்கவில்லை!



சற்று நேரம் கழித்து ..
ஸ்பைடர், உனக்கு இரவுச் சாப்பாடு கொண்டு வந்திருக்கிறேன்!
ஆளைக் காணுமே... தப்பி விட்டானே!


இன்னும் இல்லை . ஆனால் வெகு சீக்கிரத்தில் தப்பிச் செல்வேன்!
ஸ்பைடர் தப்பிக்க முயற்சிக்கிறான்- சுட்டுத் தள்ளு!
முயற்சிக்கவில்லை!
விரைந்து தன் வலைத் துப்பாக்கியால் எஃகின் நிகரான நுண்ணிய வலுவான இழை ஒன்றை உருவாக்கி மேற்கூரையில் ஒட்டச் செய்தான் ஸ்பைடர்...



முடிக்கப் போகிறேன் காரியத்தை!
மன்னியுங்கள் தோழர்களே!
ஊப்ப்!


வெளிவந்த ஸ்பைடரின் எதிரே கம்பித் தடுப்பு ஒன்று காட்சி தந்தது ..
தடுப்புக் கம்பிகள் - விரும்பிய வாறெல்லாம் வளைந்து நெளியும்என் அற்புத உடற்கட்டின் முன்னே இது எம்மாத்திரம்!


ஊடுருவி வந்த ஸ்பைடர் மற்றொரு தடையையும் கடக்க வேண்டியவனா யிருந்தான் ..
நில் அப்படியே .. இல்லையோ, சுடப்படுவாய்!
உண்மையாகவா !


அந்த ஆபத்தான விளையாட்டுக் கருவி உன் கையிலிருப்பது தப்பு!


பதிலுக்கு இதை வாங்கிக் கொள்!


கடைசித் தடையான உயரிய சிறைச்
சுவரையும் வெகு அனாயாசமாய்க்
கடந்து வந்தான் அந்த வலை
மாஸ்டர் ..
சில சிலந்திகள் கொட்டும் தன்மை
கொண்டவை-மற்றும் சில விரை
வதில் வேகம் காட்டுபவை இந்த
ஸ்பைடரோ இரண்டுமே வாய்க்கப்
பெற்றவன்!


எந்தச் சிறையாலும் என்னைத்
தடுத்து நிறுத்த முடியாது-
எத்தகைய கில்லாடிக் குற்ற
வாளியானாலும் அவனுடைய
ஜம்பம் என்னிடம் பலிக்காது!
விரைவில் அதனை இவ்வுலகம்
புரிந்து கொள்ளும்!

# அத்தியாயம்—4 விசித்திர விளையாட்டு!




உன் கருத்துத் தவறு, ஆர்டினி!
ஈஈஈஈக்!
ஓ வந்து.. பாஸ், நீங்களா! சிறையை உடைத்து உங்களை விடுவித்துக்கொண்டுவருவது பற்றி இப்போதுதான் ஆலோசித்துக் கொண்டிருந்தோம் அதற்குள்
நானும் உன் தலையை உடைப்பது பற்றி யோசித்துக் கொண்டுதான் வந்தேன்!


.. அதற்குத் தேர்ந்தெடுத்திருக்கும் முறை இருக்கிறதே அது மகாக் கொடுமையானது!
வே;வேண்டாம், பாஸ்! ஏதோ அறியாத்தனமாய் நடந்து கொண்டேன்... ம-மன்னியுங்கள்!
ஆச்சரியப்படும் விதமாய், துரோகம் புரிந்த தன் சகாவிற்கு எவ்வித தீங்கும் புரியாது அவனை கீழே தள்ளிவிட்டு எழுந்த ஸ்பைடர்..
ஆனால் உன் தண்டனையை ஒத்திப்போட வேண்டிய சூழ்நிலை..
எ-என்ன? எதனால்?
முதலாவதாக, எனக்கு அந்த சதுரங்க வெறியனை அழித்தாக வேண்டும். அதுவும் அவனது விளையாட்டு முறையிலேயே!



ச.வெ. 4


சிலமணி நேரங்களுக்குப் பின், பொழுது போக்கு அம்சம் நிறைந்த தொலைக் காட்சி நிகழ்ச்சியினைப் பார்த்துக் கொண்டிருந்தான் சதுரங்க வெறியன்...
இன்று, முன்னாள் குற்றத் தொழில் தலைவனான ஸ்பைடர் தொள்ளாயிர வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளான்!
ஹா! ஹா! அற்புதம்... அற்புதம்!
அவசரம்! முக்கி செய்தி!
சற்றுப் பொறுங்கள், நேயர்களே! ஸ்பைடர் சமாச்சாரத்தில் புதுச் செய்தி ஒன்று வந்துள்ளது


ருசிகரமான செய்தியும்கூட! ஸ்பைடர் சிறையிலிருந்து தப்பிவிட்...டான்!
இருக்காது... நம்ப மாட்டேன் நான்!
திரையில் செய்திவாசிப்பாளர் மறைந்து புதிய நபர் காட்சி தந்தார்...
ஸ்பைடர் பேசுகிறேன் மடையர்களே...!


நான் சிறையிலடைக்கப் பட்ட குற்றத்திற்கு சம்பந்தமற்ற நிரபராதி என்பதை அமெரிக்க மக்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்!


சதுரங்க வெறியன் எனப்படும் ஒரு மோசக்காரனால் இந்தக் குற்றத்தில் மாட்டிக் கொண்டேன்..!
புரபஸர், பாஸிற்கு ஒரு க்ளோஸப் காட்சி கொடுப்போமா?



எங்கோ தொலைதூரத்தில் இருக்கும் அந்தத் தாங்கெட்டவனுக்கு சவால் விடுகிறேன் அடுத்து விளையாடும் சதுரங்க ஆட்டத்தில் வெற்றிபெறுபவரே நிரந்தரமாய் ஜெயித் தபவராகக் கருதப்படுவார்!
த்சு! இம்முறை இவனது கொட்டம் அத்துமீறிப் போய்விட்டது...
அடக்குகிறேன் அவனை...! இம்முறை நடக்கப்போவது மரண ஆட்டம்!
படால்!



ஆத்திரத்தின் உச்சத்தையடைந்த சதுரங்க வெறியனின் செஸ் - ஓ - மாடிக் என்னும் எந்திர மனிதன் விடுத்த எச்சரிக்கையினை அலட்சியப் படுத்தினான்...
ஜாக்கிரதை . ஸ்பைடர் .. ஜாக்கிரதை!



விரைவில் இரண்டு எதிராளிகளும் வெறியனின் சதுரங்க மாளிகையில் சந்தித்தனர் . உலகின் நம்ப முடியாத .. மிகவும் பயங்கரமான ...எக்காலத்திலும் நிகழாத... சதுரங்க ஆட்டம் அது!
ஹலோ, மூளையற்றவனே!
வருக, வருக வார்ப்பிரும்பு மூஞ்சிக்காரா!
104


உள்ளே வா, மூட்டைப் பூச்சியே .. உன் முடிவை மேலும் தாமதப் படுத்தாது விரைந்து முடிப்பேன் அனைத்தும் தயார்!
பொறு! உன் குழந்தைத் தனமான கண்டுபிடிப்புகளை நான் பயன் படுத்தப் போவதில்லை!
இந்த ஸ்பைடர் எப்போதும் தயார் நிலையில்தான் வருவான்!


ஆட்டம் துவங்கியது .
சில நகர்த்தல்களுக்குப் பின், சதுரங்க வெறியன் முதல் வீழ்த்தலைத் தனதாக்கிக் கொண்டான் ...
பொறு! ஒருசிப்பாய் குறைவது எனக்கொன்றும் பெரிய இழப்பல்ல! தொடர்ந்து ஆடு!
ஆஹா! வெற்றியின் ஆரம்பம்.. !
படார்!



இப்போது உனது பிஷப் காய் என் வசம்!
ஆட்டம் சூடு பிடித்ததுடன் வெறித்தனமும் கூடலாயிற்று!
வாயுவைப் பீச்சுகிறேன்!


...அத்தோடு நொறுக்கவும் செய்கிறேன்!



உன் குதிரையையும் ஊதித் தள்ளுகிறேன்!
புஸ்ஸ்!
108



பேராசைக் காரப் பிசாசே, உன் செய்கைகளுக்கு இதோ என் பதில் நடவடிக்கை ..
நானும் விடுகிறேன் ஒரு குத்து..!
.. அடுத்து வாயுத் தாக்குதல்..!



... இப்போது உன் ராஜா பஹல்!



சில நிமிடங்களில் யுத்த வீரர்களின் எண்ணிக்கை வெகுவேகமாகக் குறைந்தது ..


திடீரென சதுரங்க வெறியனிடமிருந்து ஆரவாரக் கொக்கரிப்பு ..
ய்யாரா! தோற்கப் போகிறாய், ஸ்பைடர்! வலுமிக்க உன் ராணிக்காய் இனி நகர்த்த வழியற்றதாகி விட்டது!
ஹி, ஹி! இந்த உளறுவாயன் நான் என் ராஜாவைக் கீழேகொண்டு வந்திருப் பதைக் கவனிக்கவில்லை .. அடுத்த நகர்த் தலில் அவனுடையதை வீழ்த்தப் போகிறேன்!
ஆனால் சதுரங்க வெறியன் தன் பயமுறுத்தலை செயல் வடிவில் காண்பிக்கத் துவங்குமுன் ..
நிறுத்து!


இது ஒரு வலைவிரிப்பு! ஏமாற்று வலைவிரிப்பு! திரும்பவும் யோசி இல்லையோ தோல்வி கிட்டும்!
ஆனால் ஏற்கனவே வெற்றி மதர்ப்பேறியவனாய் இருந்த சதுரங்க வெறியனே...
வாயை மூடு, எந்திரமே!
அறிவாளியான எனக்கு உன் பயனற்ற புத்திமதி தேவையில்லை! இனி நீ உன் வாயைத் திறக்கக் கூடாது.



...நிரந்தரமாய்!
வீசி எறியப்பட்ட காய் அந்தக் கம்ப்
யூட்டரின் செயல் அமைப்பை
நொறுக்கியது...


விநாடிப் பொழுது நேர மரண
அமைதிக்குப் பின்...
ய்யயீயீஈஈ!



இயக்கக் கட்டுப்பாட்டில் கோளாறு நேர்ந்த அந்த மனித வடிவக் கம்ப்யூட்டர் தன்னை அந்நிலைக்கு ஆளாக்கியவனை நோக்கி மெதுவாய் முன்னேறியது ..
ப்ஸ்ஸ்ஸ்! ர்ர்ரிங்ங்ங்!
ஹே! என்ன ..என்ன வாயிற்று உனக்கு? போ போய்விடு அப்பால் !
ஆணைக்குச் செவிமடுக்கும் நிலையைத் தாண்டிவிட்டது அந்த எந்திரம்
ர்ரரராரா! மனித முட்டாளே! உன்.. குற்றவியல் வெற்றிக்கு இதுவரை வழிவகுத்துத் தந்தது என் மூளையே!


நான்...இல்லாமல் . நீ ..ஒரு .. வெற்று வேட்டு ..! ஸ்ஸ்ஸ்ங்!
இ-இல்லை . நீ ... சொல்வது பொய்!
அந்தக் கம்ப்யூட்டர் எந்திரம் தானே உருவாக்கிய இயக்கக் கட்டுப்பாட்டு அமைப்புக்களை தன் கையாலே தகர்த்தது .. அதன் விளைவாய் பிரம்மாண்ட ஹோவர்க்ராப்ட் கலம் ஆட்டம் காணத்துவங்கியது ..
ஹேற, பாஸ் எனக்கு மூச்சுத் திணறுகிறது வாருங்கள் கிளம்புவோம்!
இப்போதுதான் நீ உருப்படியான யோசனை ஒன்றைக் கூறியிருக்கிறாய், ஆர்டினி !


வாருங்கள், எனது நோக்கம் நிறைவெய்தும் நேரம் வந்து விட்டது! நமக்கிங்கு இனி வேலையில்லை!


ஸ்பைடர், சகாக்களுடன் தன் ஹெலி-காரினை அடைந்த சற்றைக்கெல்லாம்.
ஆஹா! காதில் தேனாய் ஒலிக்கும் ஓசை சதுரங்க வெறியனின் மரண ஓலம் அது என்பது என் யூகம்!
சந்தேகமேயில்லை, பாஸ்!


ஆனால் அந்தக் கம்ப்யூட்டர் இன்றும் தன் அழிவுப் பணியை முடிக்கவில்லை .
ப்ஸ்ஸ்ஸ்! அழிவு .. நிர்மூலம்! ப்யீயீயாங்!


அரிஸோனா பாலைவன மணற்பரப்பினை நோக்கி மிகப்பெரும் இலையுதிர்காலச் சருகினைப்போன்று சுழன்று வந்து கொண்டிருந்தது அந்த சதுரங்க அரண்மனை...



சதுரங்க வெறியன் தன் கடைசி விளையாட்டை ஆடி ஓய்ந்தான்!
ஓ, மரணம் ஜெயித்து விட்டது அவனை!


ஹி, ஹி, ஹா, ஹா! இனி உங்களுக்கு அந்தச் சதுரங்க வெறியனின் தொல்லை இல்லை! உங்களை எதிர்க்கத் துணியும் அறிவு ஜீவிகளை எண்ணிப் பரிதாபப் படுகிறேன், பாஸ்!
என்னை விமர்சிப்பதற்கு உனக்கேதடா அதிகாரம்?
ய்ய்யூ! ஹே, விடுங்கள் பாஸ்.. நான் சொன்னது வெறும் ஜோக் வேடிக்கை !
தெரியும், ஆர்டினி .. அதற்கு நான் சிரித் தாக வேண்டும் இல்லையா?


போ.. போய் விடு, பாலைவனப் பெருச்சாளியே!
ஆ ஆ ஆ!
அரிஸோனா பாலைவனத்தின் மணல்வெளி மிருதுவானது. ஆனால் ஆர்டினி தரை இறங்க தேர்ந்தெடுத்த இடமோ துரதிர்ஷ்டவசமானது ..
ஊப்ப்ப்!
எப்படியிருக்கிறது மலர்ப்படுக்கை?



பாலைவனத்தின் பயங்கரத்தைக் கற்பனை பண்ணிப் பார்த்த ராய் ஆர்டினி பரிதாபமாய் ஓலமிட்டான் ..
ஐயோ! என்னைக் கைவிட்டு விடாதீர்கள்! தாகம் உயிர் போகிறது! இரக்கம் காட்டுங்கள் .. தண்ணீர் தண்ணீர்!
ஸ்பைடர், அவனை இப்படி அம்போ என விட்டுவிட்டுப் போவதுதான் உன் எண்ணமா? சிறிது இரக்கம் காட்டக் கூடாதா?
இரக்கமா? அந்தத் துரோகியிடமா? கூட இருந்தே குழிபறிப்பவனாயிற்றே அவன்!
.. ஆனாலும் இரக்கம் காட்டுவேன்! நயவஞ்சகனை ஆர்டினி இல்லாமல் வாழ்வு முன்போல் இருக்காது எனக்கு!




லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும்:
S. விஜயன். முகவரி : லயன் காமிக்ஸ், த. பெ. 55,
சிவகாசி - 626 123. போன் : 1159. வெளியீடு எண் : 22.
அச்சிட்டோர் : முத்து பைன் ஆர்ட் பப்ளிகேஷன்ஸ்.

அன்பார்ந்த வாசகர்களுக்கு,

வணக்கம். கடந்த நான்கைந்து மாதங்களாக நீங்கள் எழுதி வரும் விமர்சனக் கடிதங்களில் ஒரு ஒற்றுமையைக் காண முடிகிறது! "லயன் காமிக்ஸ்" அறிமுகப் படுத்தி வரும் புதுப்புது நாயகர்களை உங்கள் அனைவருக்கும் பெரும்பாலும் பிடித்துப் போய் விட்டது என்பது தான் அந்த ஒற்றுமை!

சமீபத்தில் வந்த இரட்டை வேட்டையர், டெக்ஸ் வில்லர், இரும்புக்கை உளவாளி, துப்பறியும் ஜேம்ஸ், லாரன்ஸ் டேவிட் சாகஸங்கள், ஸ்பைடர் & ஆர்ச்சியின் சாகஸங்களுக்கு ஈடு இணை இல்லையென்று உங்களில் பலர் எழுதியிருந்ததைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன்!

அப்பொழுது திடீரென ஒரு எண்ணம்! அத்தனை நாயகர்களையும் ஒரே இதழில் சாகஸம் செய்ய வைத்தால் என்ன? அந்த எண்ணத்தின் பிரதிபலிப்புதான் விரைவில் வெளிவரப் போகும் "கோடை மலர்"

"கோடை மலரில்" ஒரு "நட்சத்திர" அணிவகுப்பே நடைபெறவிருக்கிறது. உங்கள் அபிமான ஸ்பைடர், சாகஸ ஆர்ச்சி, துப்பறிவாளர்கள் லாரன்ஸ் & டேவிட், இரட்டை வேட்டையர்கள், இரும்புக்கை உளவாளி, ஈகிள் மேன், விக்கி; இவர்கள் போக, வேறு சில புதிய அறிமுகங்கள்—என ஒரு மாபெரும் சாகஸப் படை உங்கள் முன் அணிவகுக்கப் போகிறது!




இது தவிர, இம்முறை போனஸாக ஒரு அழகான கலர் போஸ்டரும் இதழுடன் உண்டு!

320 பக்கங்களுடன் (32 வண்ணப் பக்கங்கள் உண்டு) ரூ. 5/- விலையில், 1986 மே 1—தேதியில் "கோடை மலர்" வெளிவரும். இது பற்றிய விபரங்கள் அனைத்தும் அடுத்த இரண்டு பக்கங்களில் உள்ளன!

தொடர்ந்து ஆதரவு காட்டி, "கோடை மலரையும்" வெற்றியடையச் செய்வீர்களென்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

வாழ்த்துக்களுடன்
உங்கள்,
S. விஜயன்.


பி. கு:- அடுத்த வெளியீடான "மாஸ்கோவில் மாஸ்டர்" விலை ரூ 2—50/- அதிகப் பக்கங்களுடன் (164 பக்கங்கள்) வெளிவரவிருப்பதால் இந்த விலையேற்றம்




லயன் காமிக்ஸ்
பெருமையுடன் வழங்கும்
கோடை மலர்!
சூப்பர் சாகஸ வீரர்கள்
C.I.D. லாரன்ஸ் & டேவிட்
தோன்றும்
ARCH
காணாமல் போன விஞ்ஞானி!
லயன் காமிக்ஸ்
உங்கள் நண்பன் ஆர்ச்சி துப்பறியும்
இரட்டை வேட்டையர் தோன்றும்
கொலை வெறியன்!
விடுமுறை முழுவதும்
ரசித்துப் படிக்கக் கூடிய
அற்புத சித்திரக் கதை
குவியல்!



வால்ட் டிஸ்னியின்
மேன்
தோன்றும்
மே - 1ல் வருகிறது!
விசித்திரக் கடத்தல்!
ரூ. 5/-
ஈடு இணையற்ற
ஸ்பைடர்
தோன்றும்
இரும்புக்கை
உளவாளி தோன்றும்
ஒரு
320 பக்கங்கள்
32 பக்கங்கள் முழு வண்ணத்தில்




அடுத்த வெளியீடு!
பாக்கெட் சைஸ்!
மாஸ்கோவில் மாஸ்டர்
ரூ. 2.50
லயன் காமிக்ஸ்
127

# வாசகர் கடிதம்

● P. பாலசுப்பிரமணியன், கரூர்-1.

முரட்டுக் குணம் கொண்ட இரும்புக்கை நார்மனின் சாகஸம் வாசகர்களுக்குக் கிடைத்த புதுமையானதொரு பொங்கல் பரிசு! படு சித்ரவதைக்குப் பின் கையை இழந்த நார்மன், பழிக்குப் பழி வாங்குவது விறுவிறுப்பின் உச்சம். ஹாதலை தேடிப் பிடித்தும் கொல்ல முடியாமல் மனப்பிரமையில் சிக்கித் தவிப்பது நார்மன் மேல் பரிதாபத்தை ஏற்படுத்துவதுடன் அவனது முரட்டுக் குணத்திற்கு நியாயம் காட்டுவதாய் அமைகிறது!

● K. K. கருப்புசாமி, குள்ளம்பாளையம்.


லயன் காமிக்ஸ் என்றும்
சிகரங்களிலே ஓர் எவரெஸ்ட்
சிகரம்தான் இரும்புக்கை
உளவாளி மிஸ்டர் நார்மன்—இவர்
உண்மையாகவே ஓர் மனித எரிமலை
வாழ்க நார்மன்! வளர்க பழி வாங்கும் படலம்!

● G. P. முரளி, கோயமுத்தூர்.

"மனித எரிமலை" யில் சித்திரங்கள், சூப்பர். நார்மனின் முகம் அவன் உள்ளத்தில் ஒரு எரிமலை உள்ளதை தெளிவாக காட்டியது!

● M. அருண் பிரசாத், M. செந்தில் குமார், - கோவை.

பத்து எரிமலை குமுறினால் ஏற்படும் வெப்பத்தை விடவும் இரும்புக்கை நார்மனின் குமுறல் அளவிடத் தக்க பெரு வியப்பை ஊட்டியது. இது கதை என்றால் நம்ப முடியவில்லை. உண்மையில் நடந்த நிகழ்ச்சி போன்று தத்ரூபமாக அமைந்துள்ளது.




- முழு வளர்ச்சியடைந்த நாகத்தின் விஷப்பையிலுள்ள விஷம் 15 நபர்களைக் கொல்ல போதுமானதாகும்.

- திபெத் நாட்டில் முன்னந்தமையாம் ஒருவரையொருவர் நீட்டுவது கைகுலுக்குவதற்கு ஒத்தது.

- கோழியின் ஆயுட்காலம் எவ்வளவு தெரியுமா?

  'ஓ...தெரியுமே— அதை நாம் அடித்துச் சாப்பிடும்வரை' என்கிறீர்களா! நல்லது. அடித்துச் சாப்பிடாமல் அதை நாம் விட்டுவைத்தால்—?

  பன்னிரண்டு ஆண்டுகள்!


திகில்! காமிக்ஸ்
ஆசிரியர்:
S. விஜயன்
வெளியிடுவோர்:
பிரகாஷ் ப்
374,
26 123.
நெஞ்சங்கள் தேவை
ரூ.3/-
பிப்ரவரி இதழ் விற்பனையில்